வாசிக்க: எசேக்கியேல் 37:1-10

***"யாரை நான் அனுப்புவேன்? யார் நமது காரியமாய்ப் போவான்?... இதோ நான் இருக்கிறேன்; என்னை அனுப்பும்" (ஏசா 6:8)***

எழுப்புதல் வருமானால் அதின் திரளான கனிகளைப் பாதுகாக்கத் தலைவர்கள் முன்னதாகவே ஆயத்தப்படுத்தப்பட வேண்டும். ஆவியின் அருள்மாரியைத் தொடர்ந்து அப்போஸ்தலரின் விளக்கம் (அப் 2:14), அப்போஸ்தலரின் உபதேசம் (2:42), அப்போஸ்தலரின் நிரூபணம் (3:1,6,7), அப்போஸ்தலரின் ஆலோசனை (6:1-4), இப்படியெல்லாம் வாசிக்கிறோம். வந்து சேரப்போகிற ஆயிரக்கணக்கான ஆத்து மாக்களையும் வந்து குவியப்போகிற கணக்கற்ற காணிக்கைகளையும் ஊழலின்றி உத்தமமாய்க் கையாள அன்றைய அப்போஸ்தலரின் மனது ஏற்கனவே பக்குவப் படுத்தப்பட்டிருந்தது (அப் 2:41; 4:4,34,35). இன்று ஊழியங்களில் கூட்டமும், காசும் பெருகியதும் நீதி, நேர்மையெல்லாம் காற்றாய்ப் பறந்துபோவதை எத்தனை முறை கண்டிருக்கிறோம்? தலைவர்களுக்கு வரம் இருந்தால் போதாது, குணம் வேண்டும்.

அனைத்துலக ஊழியத்திற்காக இயேசு தமது சீடர்களைத் தமது பூவுலக ஊழிய நாட்களில் ஆயத்தப்படுத்திக்கொண்டே இருந்தார். விண்ணேகுமுன் இறுதியான ஆயத்தங்களை நடப்பித்தார். பன்னிருவருக்கும் தலைவனான பேதுரு வோடு இடைபட்டார். கிறிஸ்துவின் ஊழியனுக்கு அன்பானது அடிக்கல்லும் உச்சக்கல்லுமாகும். முதலாவது கிறிஸ்து பேதுருவை மனிதரைப் பிடிக்கும் மீனவ னாக அழைத்தார் (மத் 4:19). பிறகு அன்புடன் மனிதரை நடத்தும் மேய்ப்பனாக அவரை நியமித்தார் (யோ 21:15-17). ஆத்துமாக்களை மீட்கவும் மேய்க்கவும் அன்பு தேவை. ஒன்று காணாமற்போனோருக்கான அன்பு; அடுத்தது கண்டு பிடிக்கப்பட்டோருக்கான அன்பு. அடுத்த சில நாட்களில் பல்லாயிரங்கள் விண்ண ரசிற்குள் பிறக்க இருந்தனர். அதற்காய்த் தலைவன் ஆயத்தப்படுத்தப்பட்டான். முன்பு கடவுள் பேதுருவிடம் "சாவிகளைக்" கொடுத்திருந்தார் (மத் 16:19); இப் பொழுது "தடியையும் கோலையும்" கொடுக்கிறார் (சங் 23:4). ஆத்துமாக்கள் மந்தைக்குள் வரவேண்டும்; மந்தையில் வளரவேண்டும். இறுதியில் சுமக்க வேண்டிய சிலுவைக்காகவும் பேதுருவை ஆயத்தப்படுத்தினார் (யோ 21:18,19). தலைவர்களைப் பயிற்சிப்பதில் இயேசுவுக்கு நிகரில்லை.

சீடத்துவ மற்றும் தலைமைத்துவப் பயிற்சிகள் நடத்தும் நல்ல ஊழிய இயக் கங்களுக்காய்க் கடவுளைத் துதிப்போம். நெகேமியா புத்தகத் தையும், தீமோத்தேயு, தீத்து நிருபங்களையும் திரும்பத் திரும்ப வாசிப்போம். Overseas Missionary Fellowshipக்கு ஓர் ஆலோசக இயக்குநராய் இருந்த J. ஆஸ்வால்டு சான்டர்ஸ் (1902-1992) எழுதிய *Spiritual Leadership* என்ற நூலைத் தலைமைப் பொறுப்பிலுள்ள ஒவ்வொருவரும் கட்டாயம் அடிக்கடி வாசிக்க வேண்டும். இந்நூலை வாசித்தபின் நாம் மாறாமல் இருக்கமுடியாது!



*வித்தை ஞானம் அறிவு வேத சத்தியங்களில்*
*மிக்க உயர்ந்து தேர்ந்து விண்ணொளி இவர் வீசச்,*
*சத்யம் சகலத் துள்ளும் தாசர்களை நடத்தும்*
*சத்ய ஆவி இவர்மேல் சம்பூரணமாய்ப் பெய்ய! (கீர்த்தனை)*
*— வே. சந்தியாகு ஐயர், மதுரை*